ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாதா2ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா3ந்தாசார்யவர்யோ மே ஸந்நித4த்தாம் ஸதா3 ஹ்ருதி3 ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ வானவர் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க3ராமாநுஜ மஹாதே3ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வானவர் ॥

## திருவேங்கடம் - 4

‡வானவர் தங்கள் சிந்தை போல⋆ என்
நெஞ்சமே! இனிதுவந்து⋆ மா தவ
மானவர் தங்கள் சிந்தை⋆ அமர்ந்துறைகின்ற எந்தை⋆
கானவர் இடு கார் அகில் புகை⋆
ஓங்கு வேங்கடம் மேவி⋆ மாண் குறள்
ஆன அந்தணற்கு⋆ இன்றடிமைத் தொழில் பூண்டாயே (1)

உறவு சுற்றம் என்றொன்றிலா⋆ ஒருவன்
உகந்தவர் தம்மை⋆ மண்மிசைப்
பிறவியே கெடுப்பான்⋆ அது கண்டென் நெஞ்சம் என்பாய்⋆
குறவர் மாதர்களோடு⋆ வண்டு
குறிஞ்சி மருள் இசை பாடும் வேங்கடத்து⋆
அறவ நாயகற்கு⋆ இன்றடிமைத் தொழில் பூண்டாயே (2)

இண்டையாயின கொண்டு⋆ தொண்டர்கள்
ஏத்துவார் உறவோடும்⋆ வானிடைக்
கொண்டு போய் இடவும்⋆ அது கண்டென் நெஞ்சம் என்பாய்⋆
வண்டு வாழ் வட வேங்கட மலை⋆
கோயில் கொண்டதனோடும்⋆ மீமிசை
அண்டம் ஆண்டிருப்பாற்கு⋆ அடிமைத் தொழில் பூண்டாயே (3)

பாவியாது செய்தாய் என் நெஞ்சமே!⋆
பண்டு தொண்டு செய்தாரை⋆ மண்மிசை
மேவி ஆட்கொண்டு போய்⋆ விசும்பேற வைக்கும் எந்தை⋆
கோவி நாயகன் கொண்டல் உந்துயர்⋆
வேங்கட மலை ஆண்டு⋆ வானவர்
ஆவியாய் இருப்பாற்கு⋆ அடிமைத் தொழில் பூண்டாயே (4)

www.prapatti.com

பொங்கு போதியும் பிண்டியுமுடைப்⋆
புத்தர் நோன்பியர் பள்ளியுள் உறை⋆
தங்கள் தேவரும் தாங்களுமே ஆக⋆ என் நெஞ்சம் என்பாய்⋆
எங்கும் வானவர் தானவர் நிறைந்-
தேத்தும்⋆ வேங்கடம் மேவி நின்றருள்⋆
அங்கணாயகற்கு⋆ இன்றடிமைத் தொழில் பூண்டாயே (5)

துவரி ஆடையர் மட்டையர்⋆ சமண்
தொண்டர்கள் மண்டி உண்டு பின்னரும்⋆
தமரும் தாங்களுமே தடிக்க⋆ என் நெஞ்சம் என்பாய்⋆
கவரி மாக் கணம் சேரும்⋆ வேங்கடம்
கோயில் கொண்ட கண் ஆர் விசும்பிடை⋆
அமர நாயகற்கு⋆ இன்றடிமைத் தொழில் பூண்டாயே (6)

தருக்கினால் சமண் செய்து⋆ சோறு தண்
தயிரினால் திரளை⋆ மிடற்றிடை
நெருக்குவார் அலக்கண்⋆ அது கண்டென் நெஞ்சம் என்பாய்⋆
மருட்கள் வண்டுகள் பாடும்⋆ வேங்கடம்
கோயில் கொண்டதனோடும்⋆ வானிடை
அருக்கன் மேவி நிற்பாற்கு⋆ அடிமைத் தொழில் பூண்டாயே (7)

சேயன் அணியன் சிறியன் பெரியன்
என்பதும்⋆ சிலர் பேசக் கேட்டிருந்தே⋆
என் நெஞ்சம் என்பாய்!⋆ எனக்கொன்று சொல்லாதே⋆
வேய்கள் நின்று வெண் முத்தமே சொரி⋆
வேங்கட மலை கோயில் மேவிய⋆
ஆயர் நாயகற்கு⋆ இன்றடிமைத் தொழில் பூண்டாயே (8)

கூடி ஆடி உரைத்ததே உரைத்தாய்⋆
என் நெஞ்சம் என்பாய்! துணிந்து கேள்⋆
பாடி ஆடிப் பலரும்⋆ பணிந்தேத்திக் காண்கிலார்⋆
ஆடு தாமரையோனும் ஈசனும்⋆
அமரர் கோனும் நின்றேத்தும்⋆ வேங்கட-
த்தாடு கூத்தனுக்கு⋆ இன்றடிமைத் தொழில் பூண்டாயே (9)



www.prapatti.com

‡மின்னு மா முகில் மேவு⋆ தண் திரு-
வேங்கட மலை கோயில் மேவிய⋆
அன்னமாய் நிகழ்ந்த⋆ அமரர் பெருமானை⋆
கன்னி மா மதிள் மங்கையர் கலி-
கன்றி⋆ இன் தமிழால் உரைத்த⋆ இம்
மன்னு பாடல் வல்லார்க்கு⋆ இடம் ஆகும் வான் உலகே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com